**தொகுதி 9 - ஞானமான வாடிக்கையாளர்** **செயற்பாட்டுத் தாள் 9-10**

**உங்கள் நிதி அறிவை மதிப்பிடுங்கள், பகுதி2**

1 (குறைந்தது) 10 (கூடியது) என்ற அளவில் உங்களை மதிப்பிடுங்கள்.

| திறமை அல்லது அறிவுப் பகுதி | மதிப்பீடு 1-10 |
|---|---|
| நான் ஒவ்வொரு மாதமும் என் வருமானம் மற்றும் செலவுகளை கண்காணிக்கிறேன். | |
| நான் விரும்பும் பொருட்களை வாங்க பணம் சேமிக்க வழிகளைக் கண்டுபிடிக்கிறேன். | |
| எனது எதிர்காலத்திற்கான தெளிவான நிதி இலக்குகள் என்னிடம் இருக்கின்றன. | |
| நான் வாங்கப்போகும் பொருளைப்பற்றி சிந்திப்பேன். எனக்கு முக்கியமானவை எவை என்று எனக்குத்தெரியும். | |
| ஒரு வங்கிக் கணக்கை (பாங்க் அக்கவுன்ட்) தெரிவுசெய்யும்போது சிந்திக்கவேண்டியவை எவை என எனக்குத் தெரியும். | |
| நான் தற்போது உபயோகிக்கும் பாங்க் அக்கவுன்ட் மற்றும் வங்கிச் சேவைகளின் (பாங்கிங் சேர்விஸஸ்) விபரங்களை புரிந்துகொண்டுள்ளேன். | |
| கூட்டு வட்டி (கம்பவுன்ட் இன்டரஸ்ட்) என்பதன் அர்த்தத்தை நான் புரிந்துகொண்டுள்ளேன். | |
| கடன் அறிக்கை (கிரெடிற் ரிப்போர்ட்) என்றால் என்ன என்று எனக்குத் தெரியும். | |
| எனது கடன் மதிப்பெண்ணை (கிரெடிட் ஸ்கோர்) எப்படி அதிகரிப்பது என்று எனக்குத் தெரியும். | |
| கிரெடிட் கார்டின் வட்டி விகிதம் மற்றும் அது மாதாந்தம் கணக்கிடப்படும் முறைகள்பற்றி எனக்குத் தெரியும். | |
| வட்டி உட்பட கிரெடிட் கார்டில் வாங்கும் பொருளுக்கு என்ன செலவென்று எனக்குத் தெரியும். | |
| என் கடனைக் குறைக்க சில வழிகள் எனக்குத் தெரியும். | |
| கடன் வசூலிப்பு முகவரால் (கலெக்ஷன் ஏஜன்சி) செய்ய முடிந்தது முடியாதது என்னவென்று எனக்குத் தெரியும். எனது உரிமைகளைப் பற்றியும் எனக்குத் தெரியும். | |
| நிதி நிர்வாகம் பற்றி அறிவுரைபெற எங்கே செல்வது என்று எனக்குத் தெரியும். | |
| போலி அல்லது தில்லுமுல்லு வேலையை இனம்காண எனக்குத் தெரியும். | |
| பொருட்களை வாங்க விளம்பரங்கள் உபயோகிக்கும் தந்திரம் எனக்குத் தெரியும். | |
| எனது பணத்தை நிர்வகிக்க போதிய கணித அறிவு எனக்குண்டு என்று நினைக்கின்றேன். | |
| எனது பணத்தை நிர்வகிக்கும் திறமையில் எனக்கு நம்பிக்கை உண்டு என நினைக்கிறேன். | |